RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22494

OPEN ACCESS

# இடம் பெயர்ந்தவர்களின் கதை என்னும் நாவல் காட்டும் வாழ்வியல் சிக்கல்கள்

கெ. பெனடி [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி, திருவனந்தபுரம், இந்தியா

# The Story of the Migrants Reveals the Problems of Life

**K. Benady** [a, *]

[a] Department of Tamil, Government Arts college, Thycaud, Thiruvananthapuram, Kerala-695014, India

* Corresponding Author: benadyktamil@gmail.com

Received: 28-04-2022
Revised: 24-09-2022
Accepted: 07-10-2022
Published: 09-10-2022

Check for updates

**ABSTRACT**

Fiction has been recording the realities of people's lives from time to time. Fiction is the subject of historical, social, racial, and geographical records, followed by the oppressed people. Dr. Subbiah Rajendran's novel "The Story of the Migrants" focuses on the plight of tea plantation workers. The purpose of this paper is to highlight the difficulties faced by the tea plantation workers.

**Keywords:** Migrants, Subbiah Rajendran, Tea plantation workers,

## முன்னுரை

காலந்தோறும் மக்களின் வாழ்வில் நடக்கும் எதார்த்த உணர்வுகளைப் புனைக்கதை பதிவு செய்து வருகின்றது. வரலாற்று, சமூகம், இனம், நிலம் சார்ந்த பதிவுகளையும் அடுத்து ஒடுக்கப்பட்ட மக்களைப் பற்றியும் புனைகதைகள் பேசு பொருள்களாக அமைந்துள்ளன. முனைவர் சுப்பையா இராஜேந்திரன் அவர்களின் "இடம் பெயர்ந்தவர்களின் கதை" எனும் நாவல் தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையை மையப்படுத்தி பேசுவதாக அமைந்துள்ளது. தேயிலை தோட்ட தொழிலாளர்களின் வாழ்வியல் சிக்கல்களை வெளிப்படுத்திக் காட்டுவதே இவ் -ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகிறது.

## சமுதாயச் சிக்கல்கள்

சமுதாயச் சிக்கல்களில் பொருளாதாரச் சிக்கலே சமூகத்தைப் பெரிதும் பாதிக்கும் சிக்கலாகும். பொருளாதார ஏற்றத்தாழ்வினால் மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகின்றனர். செல்வவளம் படைத்தவர்கள் ஏழை எளிய மக்களை அடிமைப்படுத்துகின்றனர். ஏழைகள் அவர்களை எதிர்கொள்ள இயலாமல் தவிக்கின்றனர். ஒரே இனத்திற்குள்ளேயே பொருளாதார முரண்பாடுகள் எழுகின்றன. "இந்திய சமூகத்தின் சராசரி நிலை ஏழ்மைநிலை" என்பர்.

## ஏழ்மை நிலை

மனிதன் சமுதாயத்தில் வாழ்வதற்குச் சில அடிப்படை வசதிகள் தேவைபடுகின்றன. இவை உண்ண உணவு, உடுத்த உடை, இருக்க இடம் ஆகியவை ஆகும். இந்த அடிப்படை வசதிகள் முழுமையாகக் கிடைக்காமல் இன்னலுறும் மக்கள் ஏழ்மையுடையவர்கள் ஆவர். அவர்களுக்கு அடிப்படைத் தேவைகள் கூடக் கிடைப்பதில்லை. பொருளாதாரச் சிக்கலினால் கல்வி பெறாத மக்கள் பலரை சுப்பையா ராஜேந்திரன் நாவல்களில் காணமுடிகிறது. ஆண்களும் பெண்களும் ஏழ்மைநிலை வாழ்க்கையில் உழலுகின்றனர். ஏழ்மை இவர்களுக்கு பெரும் சிக்கலைத் தோற்றுவிக்கிறது.

குடும்பங்களின் ஏழ்மை நிலையை விளக்க "அம்மா உழைத்து உழைத்து இளைத்துப் போயிருந்தாள். கொளுந்து கூடையை தலையில் தாங்கி ஏறாத மலைகள் ஏறி காற்றுக்கும் மழைக்கும், வெயிலுக்கும் குளிருக்கும், அட்டைக்கும் பாம்புக்கும் எல்லாம் பயந்து பயந்து வாழ்ந்ததால் அவள் வாழ்க்கையின் கடைசி அத்தியாயத்தை அடைந்திருந்தாள். மேலும் “அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் எஸ்டேற்று மக்களுக்கு இட்டலி என்பது என்றாவது ஒரு நல்ல நாளுக்கு மட்டும்தான் கிடைக்கும். மற்ற நாட்களில் கோதம்பு ரொட்டியும் கட்டம் வெள்ளமும்தான்”1 என்னும் பகுதிகள் உணர்த்துகின்றன. நாவலில் பல பகுதிகளில் ஏழ்மை நிலைமை உடைய மக்களின் வாழ்க்கை நிலையை ஆழமாகப் பதிவு செய்கிறார்.

## வறுமை

மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதுமான பணம் இல்லாத நிலையை வறுமை என வரையறுக்கப்படுகிறது. வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருளே கிடைக்காத மக்கள் வறுமையிலுள்ளோர் என்று அழைக்கப்படுகின்றனர். வறுமைக்கோட்டிற்கும் கீழே உள்ளவர்கள் என்ற நிலையில் சிலர் உள்ளனர். இவர்களும் இத்தகையோரே ஆவர். குறிப்பாக உணவு, உடை மற்றும் உறைவிடம் முதலியன இத்தகையோர்க்கு மிகவும் தட்டுப்பாடாக இருக்கும். தமிழ் இலக்கியங்களில் பல இடங்களில் வறுமை என்பது பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

வறுமையில் சிக்கிக்கொள்ளும் மனிதன் மிகவும் துயருறுகிறான். அவனுக்கு உண்டாகும் துயரம் குறித்து,

"குடிப்பிறப்பு அழிக்கும் விழுப்பங் கொல்லும்

பிடித்த கல்வி பெரும்புணை விடுஉம்

நாணணி களையும் மானெழில் சிதைக்கும்

பூண்முலை மாதரோடு புறங்கட நிறுத்தும்

பசிப்பிணி யென்னும் பாவி..... "

என்று மணிமேகலை குறிப்பிடுகின்றது (Chithalai Saathanar, 2010).

சுப்பையா இராஜேந்திரன் நாவலில் குடும்ப வறுமை தனிமனிதனுக்கு ஏற்பட்டவறுமை முதலியவற்றைச் சித்தரிக்கின்றன. மனித சமூகம் வறுமையிலிருந்து மீண்டும் வளம் பெற்றுள்ள தற்காலப் பொருளாதார வளர்ச்சி நிலையிலும் சமூகத்தின் வறுமை கலந்துள்ளது என்பதை தம் நாவலில் எடுத்தியம்பியுள்ளார்.

"பனிமலை எஸ்டேட்டின் வீட்டின் நிலையை "சிறிய ஒரு வராந்தா, அதைத் தொடர்ந்து சிறிய ஒரு அடுக்களை இதுதான் அந்த லயத்தில் உள்ள ஒரு தொழிலாளி குடும்பமாக இருந்தாலும் பெரிய குடும்பமாக இருந்தாலும் அதில்தான் வாழ்க்கை நடத்த வேண்டும் இந்தச் சிறிய வீட்டின் பல ஆண்டுகளுக்கு முன்னர் பத்தும், பதினைந்தும் உறுப்பினர்கள் வாழ்ந்து வந்தனராம்”3.

மேலும் தொழிலாளர்களின் நிலையை கூறும் போது "அக்காமார்களுக்கு பனிரெண்டு, பதிமூன்று வயதுகள்தான் உண்டு. வேலை செய்துவிட்டு வீட்டிற்கு வரும்போது கைகளிலும் கால்களிலும் தேயிலைக் காம்புகள் கொண்டு காயங்கள் ஏற்பட்டு இரத்தம் வடியும் சாப்பிடக்கூட முடியாது"4 என்று தனது வறுமை நிலையை வெளிப்படுத்துகிறார்.

## பொருளாதார ஆதிக்கம்

ஆதிக்கம் என்பது அதிகாரம் செலுத்துவதாகும். எல்லாவற்றையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து தன் ஆணைக்கு அடங்கிச் செல்லும்படி ஒருவர் செய்வது ஆதிக்கமாகும். அரசியல், சமூகம், பொருளாதாரம் முதலியவற்றில் இந்த ஆதிக்கத்தைக் காணமுடிகிறது.

பொருளாதார ஆதிக்கம் என்பது பொருள் படைத்தோர் அதனைப் பயன்படுத்தி மற்றவற்றைத் தம் கட்டுக்குள் கொண்டு வருவதைச் சுட்டுகிறது. மற்றவர்கள் கருத்தை ஏற்காமல் தம் கருத்தையே வலியுறுத்த அவர்கள் முனைவர். இவர்களை ஆதிக்க சக்தி என்று கூறுவர். பொருட்பலத்தால் அதிகாரத்தை அடைவது பொருளாதார ஆதிக்கமாகும். இந்தக் கொடுக்கல் பரிமாற்றத்தின் மையமாக இருப்பது பணம்தான் இந்தப் பரிமாற்றத்தில்.

(அ) கொடுக்கல் வாங்கலில் மையம் பயணமே பணம் இல்லாத நிலையை எண்ணமுடியாது".

சுப்பையா இராஜேந்தினின் "இடம் பெயர்ந்தவர்களின் கதை' நாவலில் பொருளாதார வசதிபடைத்த அதிகார வர்க்கத்தைச் சார்ந்த ஆதிக்க உணர்வு கொண்டவர்கள்.

தொழிலாளர்களிடமிருந்து கையூட்டு வாங்கும் நிலையை "கம்பெனியில் வேலைபார்த்த கங்காணிமார் தொடங்கி மானேஜர்மார்கள் வரை தொழிலாளிகளிடமிருந்தும், கட்சித் தலைவர்களிடமிருந்தும் கையூட்டு வாங்கத் தொடங்கினர். மேலும் புதிய தொழிலாளர்களை வேலைக்கு சேர்க்க வேண்டுமெனில் கட்சிக்கு இவ்வளவு பணம்தர வேண்டும் எனக் கேட்டுக்கொள்வர் ஆயிரம் முதல் ஐயாயிரம் வரையிலும் குடும்பத்தாரிடமிருந்து வாங்குவர்"5

என வரும் பகுதியிலிருந்து தன் பொருளாதார ஆதிக்கத்தைச் செலுத்தித் தன்னிடம் வேலை செய்யும் கூலியாட்களை அடிமைப்படுத்தும் நிலையை தன் கதையில் தெளிவாகவும் உணர்வுப் பூர்வமாகவும் எடுத்துரைத்துள்ள பாங்கை அறியமுடிகிறது.

## சாதிக்கொடுமை

சமூகத்தில் தொன்றுதொட்டு நிகழ்ந்துவரும் அவலம் சாதியின் பெயரால் நடக்கும் கொடுமையே, சாதிக்கொடுமை பல்வேறு இடங்களில் பரந்து காணப்பட்ட போதும், அதன் கொடுமைகளைப் பற்றி பல எழுத்தாளர்களும் தம்முடைய படைப்புக்களில் வாயிலாக எடுத்துக்காட்டியுள்ளார்..

"சாதி இரண்டொழிய வேறில்லை

சாற்றுங்கால்

நீதி வழுவா நெறிமுறையின்

மேதினியில்

இட்டார் பெரியோர் இடாதார்

இழிகுலத்தோர்

பட்டாங்கில் உள்ளபடி"6

என்று அவ்வை மூதாட்டி எத்தனையோ காலங்கள் முன்பே கூறியுள்ளார். என்றாலும் இன்றும் நமது சமுதாயத்தில் சாதி மோதல்கள் நடைபெற்ற வண்ணம்தான் இருக்கின்றன (Vengatasaami Naattaar, 2016).

"அவ்வகையில் சுப்பையா இராஜேந்திரனின் நாவலும் அவ்வவலத்தைச் சுட்டுகிறது.

சாதி என்னும் கொடிய நோய்க்கிருமி அன்று முதல் இன்று வரை தொற்று போல் பரவி வருகிறது. சமுதாயத்தின் மீது அக்கறை கொண்ட இலக்கியப் படைப்பாளிகள் காலந்தோறும் சாதிக்கொடுமையை எதிர்த்துக்குரல் எழுப்பிக்கொண்டேயிருக்கின்றனர். எனினும் சாதி ஓய்வு பெற்றபாடில்லை.

நாவலில் சுட்டப்படும் மக்கள் தங்களின் சாதியைப் பற்றி உயர்வான எண்ணமுடையவர்களாக இருக்கின்றனர். தாழ்த்தப்பட்ட பிரிவினைச் சேர்ந்தவர்களுடன் சமமாக போவதையும் பழகுவதையும் அவர்கள் கேவலமான செயலாக எண்ணுகிறார்கள் என்பதை விளக்க "நீ சிவதாணுவுக்கு மகன் தானே' என்று ஆம் என்று பயத்தால் பதிலளித்தான் உன்னை இந்த வீட்டிற்குள் வரச்சொன்னது யாரு? "ஏசுதாஸ்; என்றான் கோபால்! இங்கு வருவது சரி எனக்க கட்டிலிலோ மேசைக்க மேலேயோ இருக்கப்படாது என்ன? இனி உள்ள இங்க காணப்படாது கேட்டியா? சரி என்று தலையசைத்தான் கோபால். அவன் கவலையுடன் அந்த வீட்டிலிருந்து வெளியேறினான். அவர் எங்களைப் பார்த்து, அந்தப் பயல வீட்டுக்குக் கூட்டிட்டு வரப்பிடாது என்ன, கூட்டிட்டு வந்தாலும் உங்களுக்குக் கூட சரிசமாக இருத்தப்படாது கேட்டியா' என்றார் என்ற அவனது கூற்று சாதிப்பற்றினை வெளிக்காட்டுகிறது.

## முடிவுரை

வறுமையிலும் வாழ்க்கைப் போராட்டங்களிலும் அல்லாடுபவர்கள் கிராமங்களிலும், நகரங்களிலும் வாழ்கிறார்கள். இவர்கள் நேர்மையாகவும், நியாயத்திற்காகவும் போராடுகிறார்கள். பொருளாதாரச் சிக்கல்களில்அல்லறப்படும் மக்கள் பல சாதியிலும் உள்ளவர். வறுமையில் வாடுவோரும் இவ்வாறே காணப்படுகின்றனர். பொருளாதார இழிவுகளில் பெண்கள் அதிகமாகச் சிக்கியுள்ளனர். வீடுகள், அணிந்திருக்கும் உடை, உணவு ஆகியன வறுமையின் அடையாளங்களாக உள்ளன. ஏழை மக்கள் துயரத்திற்கு ஆட்படுகின்றனர். ஏழ்மைநிலை, வறுமைநிலை, பொருளாதார இழிவுகள் மற்றும் சாதியின் நிலைகள் போன்ற சமுதாய அவலங்களைப் போக்குவதற்கானத் தீர்வுகளையும் சுப்பையா இராஜேந்திரனின் நாவல் காட்டுகின்றன. எல்லாருக்கும் எல்லாமும் கிடைக்கின்றதான சமதர்மச் சமுதாயம் உருவாக வேண்டும் என்னும் விழைவைக் காட்டுவனவாக இராஜேந்திரனின் நாவல் அமைந்துள்ளன என்பதே இக்கட்டுரையின் முடிவாகும்.

## References

Chithalai Saathanar, (2010) Manimegalai, Kizhakku Pathippagam, Chennai, India.

Vengatasaami Naattaar, N.M. (2016) Nalvazhi, Paari nelaiyam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License